# பாட்டாளி மக்கள் கட்சி

## மாநில சிறப்பு பொதுக்குழு கூட்டம்

**இடம்:சங்கமித்ரா திருமண அரங்கம்,பட்டானூர் (புதுச்சேரி அருகில்) நாள்:17.08.2025**

### தீர்மானங்கள்

**தீர்மானம் 01:** தமிழ்நாட்டில் அதிக பெரும்பான்மை மக்களாக வாழும் வன்னியர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் போன்றவற்றில் மிக பின் தங்கிய நிலையில் உள்ளதை உணர்ந்து மிகுந்த வேதனைப்பட்ட மருத்துவர் அய்யா அவர்கள் 1980-ல் வன்னியர் சங்கம் தொடங்கி வன்னியர்களுக்கு கல்வி,வேலைவாய்ப்பில் 20% இட ஒதுக்கீடு கோரிக்கை முன்வைத்து தமிழ்நாட்டின் பரவலாக 96,000 கிராமங்களுக்கு சென்று இரவு,பகலாக பசி,பட்டினியோடு,தூக்கம் இன்றி அயராது உழைத்தும், வட்டார அளவிலும்,வட்ட அளவிலும்,மாவட்ட அளவிலும் ஏராளமான மாநாடுகள்,பேரணிகள்,போராட்டங்கள் நடத்தி வந்தார். சென்னை உழைப்பாளர் சிலை அருகில் பட்டை நாம பட்டினி போராட்டம். தமிழ் நாடு முழுவதும் ஒரு நாள் சாலை மறியல் போராட்டம், பின்னர் ஒரு நாள் ரயில் மறியல் போராட்டம், போன்ற பல கட்ட போராட்டங்களை தொடர்ந்து நடத்தி,பின்னர் உச்சகட்டமாக தமிழ்நாடே ஸ்தம்பிக்கும் வகையில் 1987-ல் 7 நாள் தொடர் சாலை மறியல் போராட்டத்தை நடத்தி 21 பேர் தங்களது இன்னுயிரை நீத்து,மருத்துவர் அய்யா அவர்கள் மற்றும் 1 லட்சத்திற்க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.போராட்ட காலங்களில் அன்றைய காவல் துறையினர் போராட்டக்காரர்களை முன்னெச்சரிக்கை கைது நடவடிக்கை என்ற பெயரால் வன்னியர்கள் வாழும் கிராமங்களில் வீடுகளுக்குச் சென்று ஆண்கள் இல்லாத நேரங்களில் பெண்களை மானபங்கப்படுத்தியும்,அவமானப்படுத்திய அநாகரிகமான, கொடுஞ்செயல்கள் அரங்கேற்றப்பட்டது. அவை மன்னிக்க முடியாதவை. மிகச் சோகமான நிகழ்வாக அமைந்தது.தொடர் போராட்டங்களினால் மருத்துவர் அய்யா அவர்கள் பட்ட பாடும், எதிர் கொண்ட நெருக்கடிகளும், பாளையங்கோட்டை மத்திய சிறைச் சாலையை தவிர மற்ற எல்லா சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டு நடந்த கொடுமைகள்,கஷ்டங்கள் சொல்லி மாளாது.உலகில் எங்கும் நடக்காத வகையில் 1989 பொதுத் தேர்தலில்,தேர்தல் புறக்கணிப்பு நடத்தி பல்லாயிரக்கணக்கான வாக்குச்சாவடிகளில் ஒரு வாக்கு கூட பதிவாகாமல் காலி பெட்டியாக எடுத்துச்சென்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தவர் மருத்துவர் அய்யா அவர்கள். மருத்துவர் அய்யா அவர்கள் கடந்து வந்த பாதை, எதிர்கொண்ட சவால்கள், காற்றாற்று வெள்ளத்தில் எதிர்நீச்சல் போட்டும், நெருப்பாற்றில் நீந்தி வந்தது போன்றதாகும். இவ்வாறு ஏராளமான துன்பங்களையும், துயரங்களையும் தாங்கிக்கொண்டு தான் முன்வைத்த கோரிக்கையான வன்னியர்களுக்கு இட ஒதுக்கீட்டிற்கு வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20% இட ஒதுக்கீட்டை பெற்றுக் கொடுத்து மிகப்பெரிய சக்தியாக விளங்கினார். அதுவும் போதாது வன்னியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டும் என தொடர்ந்து போராடி, தீவிர முயற்சி எடுத்து கடந்த ஆட்சி காலத்தில் வன்னியர்களுக்கு10.5% தனி இட ஒதுக்கீடு பெற்றுக்கொடுத்தார். ஆனால் அது தற்போது வரை நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதோடு, கண்டனத்துக்குரியது. மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து போராடி 10.5% இட ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொடுப்பார்கள். தமிழ்நாடு அளவிலும்,இந்திய அளவிலும் 6 இட ஒதுக்கீடுகளை பெற்றுக்கொடுத்த மாமனிதர் மருத்துவர் அய்யா அவர்கள் என்பதை நாடறியும்.இந்த சாதனைகளை எல்லாம் நிகழ்த்தியவர் எந்த அரசு பதவிகளிலும் இல்லாமல் போராடியே பெற்றுக்கொடுத்தது.

1989-ல் பாட்டாளி மக்கள் கட்சியை தொடங்கிய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் மத்திய அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என

**ஏராளமானவர்களை பதவிக்கு அனுப்பி,அழகு பார்த்துக்கொண்டு தான் மட்டும் எந்தப் பதவிக்கும் செல்ல--வில்லை.தமிழ்நாட்டில் வலிமையான, தவிர்க்க முடியாத, அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக நீடித்த பாட்டாளி மக்கள் கட்சி சமீப காலமாக சற்று தேக்க நிலையில் அங்கீகாரத்தை இழந்து நிற்கிறது.**

**எனவே பாட்டாளி மக்கள் கட்சியை மீண்டும் வலிமையான கட்சியாக பலப்படுத்தி வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெரும் வகையில் கட்சி அமைப்பை வாக்குச்சாவடி அள--வில் பலப்படுத்தி மாநில,மாவட்ட,மாநகர,நகர,பேரூர் போன்ற அமைப்புகளின் நிர்வாகிகள் ஊக்கத்துடன் செயல்பட்டு கட்சியை வலுப்படுத்துவதற்காக நிறுவனராக இருந்த சமூகநீதிக்காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் கட்சி அமைப்பு விதி 13 திருத்தங்களின்படி கட்சியின் தலைவராக நிர்வாகக் குழு மற்--றும் செயற்க் குழு ஆகியவற்றின் முடிவின்படி 30.05.20025 முதல் செயல்பட்டு வரும் நிலையில் மருத்துவர் அய்யா அவர்கள் பா.ம.க நிறுவனர் மற்றும் தலைவர் ஆக செயல்படுவார் என்பதை 17.08.2025 இன்றைய மாநில சிறப்பு பொதுக்குழு ஒருமனதாக அங்கீகரிக்கிறது. மருத்துவர் அய்யா அவர்கள் இப்பொறுப்பில் தொடர்ந்து செயல்படுவார் என்றும் இன்றைய பொதுக்குழு உறுதி செய்கிறது.**
**"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று".**
**என்னும் பொய்யா மொழிக்கு இணங்கவும்,மண்ணில் மனிதன் தோன்றுவதும், வாழ்வதும், மறைவ--தும் நியதி, என்றாலும் வரலாற்றில் நிலைத்து நிற்பவர் ஒரு சிலரே. என்பதற்க்கிணங்க தாங்கள் நாளை வரலாற்றில் பேசுகிற தலைவர்.வரலாற்றில் நிலைத்து நிற்கிற தலைவர்.**

**சமூகநீதிக்காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் 1980 முதல் இன்று வரை வன்னியர் சமுதாய பெருமக்களுக்காகவும், அனைத்து சமுதாய மக்களுக்காகவும், மக்களை காக்க, மண் செழிக்க, மொழி மேம்பட எனும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டும்,போராட்டமே வாழ்க்கையாக கருதியும்,கோலூன்றி நடக்கும் வயதான காலத்தும் ஊமை ஜனங்களுக்கு உயிர் உள்ளவரை உழைப்--பேன் என்று உறுதியுடன்,அனுதினமும் உழைத்து வரும் தங்களுக்கு நன்றி சொல்ல வார்த்தை இல்லை. அனைவரும் தங்களை இதயத்தில் தாங்கிக் கொண்டு வணங்குகிறோம். மக்கள் வாழ்வே தன் வாழ்வு என வாழும் மருத்துவர் அய்யா அவர்கள் நீங்கள் உடல் ஆரோக்கியத்துடன்,மனநிறையுடன்,நூறாண்டு காலம் கடந்து மேலும் நீடூழி வாழ கூடியுள்ள பொதுக்குழு சார்பிலும், ஒட்டுமொத்த மக்கள் சார்பிலும் நெஞ்சார வணங்குகிறோம்.வாழ்த்துகிறோம்.போற்றுகிறோம்.நன்றி... நன்றி... நன்றி...**

**தீர்மானம் 02: <u>வருகின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி அதிக இடங்களில் மிகப்பெரிய வெற்றியை பெற உரிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி,வெற்றிக் கூட்டணியை உரு--வாக்க மருத்துவர் அய்யா அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்படுகிறது.</u>**

தமிழ்நாட்டில் சட்டமன்ற,நாடாளுமன்றத் பொதுத் தேர்தலில் மருத்துவர் அய்யா அவர்களால் உரு--வாக்கப்பட்ட கூட்டணி தான் வெற்றிக் கூட்டணி என எல்லோராலும் பேசப்பட்டு பா.ம.க அதிக இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால் சமீப காலமாக நடைபெற்ற தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெறாத நிலை உருவாகிவிட்டது.எனவே 2026 -ல் நடைபெற உள்ள சட்டமன்ற பொது தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற உரிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி,வெற்றிக் கூட்டணியை உருவாக்க சமூகநீதிக்காவலர் **மருத்துவர் அய்யா** அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கி பொதுக்குழு ஒருமனதாக முடிவு செய்கிறது.

**தீர்மானம் 03: <u>வன்னியர்களுக்கு கல்வி வேலைவாய்ப்பில் 10.5% தனி இட ஒதுக்கீடு மருத்துவர் அய்யா அவர்களின் தீவிர முயற்சியால் கடந்த ஆட்சி காலத்தில் சட்டமாக்கப்பட்டு,தற்பொழுது நிறைவேற்றப்படா--மல் கிடப்பில் போடப்பட்டுள்ளது கண்டனத்துக்குரியது. ஏமாற்றத்தையும், அளித்து மிகுந்த வேதனை--யையும் உருவாக்கி உள்ளதால் சமூகநீதிக்காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் தலைமையில் மீண்--டும் போராடி உறுதியாக பெறுவோம்.</u>**

தமிழ்நாட்டில் கல்வி,வேலைவாய்ப்பில் மிகவும் பின் தங்கியுள்ள வன்னியர்களுகு உரிய தனி இடப்--பங்கீடு வேண்டுமென சமூகநீதிக்காவலர் **மருத்துவர் அய்யா**அவர்கள் தீவிர முயற்சி எடுத்தும்,போரா--டியும் கடந்த ஆட்சி காலத்தில் வன்னியர்களுக்கு 10.5% தனி இட ஒதுக்கீடு பெற்றுக்கொடுத்தார்.ஆனால் 10.5% தனி இட ஒதுக்கீடு கிடப்பில் போடப்பட்டு,பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.கண்டனத்துக்குரி--யது.எனவே வன்னியர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு 10.5% பெற **சமூகநீதிக்காவலர் மருத்துவர் அய்யா** அவர்கள் தலைமையில் நடைபெறும் போராட்டத்தில் முழுமையாக பங்கேற்று தனி இட ஒதுக்கீட்டை பெறுவோம் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 04: <u>தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டு அளவை உறுதி செய்ய ஜாதி வாரி மக்கள் தொகை கணக்--கெடுப்பு நடத்தப்படாமல் தட்டிக் கழித்து வருவது கண்டனத்துக்குரியது. சில மாநிலங்களில் நடத்தியது போல உடனே ஜாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.</u>**

தமிழ்நாட்டில் அனைத்து சமுதாயத்திற்கும் உரிய இட ஒதுக்கீட்டு அளவை உறுதி செய்ய 324 ஜாதி--களுக்கும் உரிய வகையில் ஜாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாமல் தட்டிக்கழித்து வருவது கண்டனத்துக்குரியது. சமூகநீதியின் பிறப்பிடம் என்னும் தமிழ்நாட்டில் ஜாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.பீகார்,ஒடிசா, ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்கள் நிறைவேற்றி முன் உதாரணமாக திகழ்கிறது.எனவே தமிழ்நாடு அரசு தட்டிக்கழிக்காமல்,இனியும் காலம் தாழ்த்தாமல் ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 05: <u>தமிழ்நாட்டில் மது விற்பனையால் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை குடிகாரர்கள் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்து குடும்ப பொருளாதாரம், குழந்தைகள் கல்வியும் பாதித்து, பெண்கள் தற்கொலை உயிரிழப்புகள் அதிகரிப்பதோடு கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட கொடூர குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதால் தமிழ்நாட்டின் மக்களை காக்க மதுவை ஒழிக்க முழு மதுவிலக்கு (பூரண மதுவிலக்கு) நடைமுறைப்படுத்த வேண்டும்.</u>**

தமிழ்நாட்டில் டாஸ்மாக் கடை மது விற்பனை மூலம் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை குடி--காரர்கள் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது. மது குடிப்பவர்களால் உடல் நலம் பாதிப்பு, குடும்ப பொருளாதார இழப்பு, குழந்தைகள் கல்வி பாதிப்பு, குடிகார கணவன் தொல்லையால் பெண்கள் தற்கொலை உயிரிழப்புகள் அதிகம் நடக்கின்ற மாநிலமாக உள்ளது. மதுவினால் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட மிகக் கொடூர குற்றச் செயல்கள் நாளும் அதிகரித்து வருகின்றன.மகாத்மா காந்தியடிகள்,மூதறிஞர் ராஜாஜி,தந்தை பெரியார்,பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் போன்ற தலைவர்கள் வழியிலும், அனைத்து மதங்களும் அறிவுறுத்தும் நிலையிலும் மதுவை ஒழித்து மக்களைக் காக்க முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 06: <u>தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் தங்கு தடை இன்றி விற்பனை செய்வதால் மாணவர்கள்,இளைஞர்கள் என பாதிக்கப்படுவோர் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருவது மிகுந்த கவலை அளிக்கிறது. போதைப் பொருள் ஒழிப்பை இரும்பு கரம் கொண்டு ஒடுக்கி போதைப் பொருள் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும்.</u>**

போதைப்பொருள் பழக்கத்தால் கொடுங் குற்றச் செயல்கள் அதிகரிப்பதால் மனித ஆற்றல் குன்றி தமிழ்நாடு பின்னோக்கி செல்லும். எனவே கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் கடத்தி வருவதையும், எங்கும் தங்கு தடையின்றி விற்பனை செய்வதையும் இரும்பு கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு உருவாக்க வேண்டும்.

**தீர்மானம் 07: பூம்புகாரில் 10.08.2025 மகளிர் பெருவிழா மாநாட்டிற்கு உழைத்தவர்களுக்கும்,கலந்து கொண்ட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சக்திமிக்க சகோதரிகளுக்கும், அனுமதி பாதுகாப்பு வழங்கியவர்--களுக்கும்,கலை குழுவினருக்கும் பாராட்டுக்கள்...வாழ்த்துக்கள்...**

பூம்புகாரில் 10.08.2025 அன்று நடைபெற்ற மகளிர் பெருவிழா மாநாடு மிக பிரம்மாண்டமாக, கோலாகலமாக பெண்ணுரிமைக்காவலர் **மருத்துவர் அய்யா** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கொட்டும் மழையிலும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சக்திமிக்க பெண்களும், 50 ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களும்,ஆண்களும் பாதுகாப்பு அரணாக கலந்துக்கொண்டது,வரலாற்று பெருமைக்--குரிய மாநாடு என்று தமிழ்நாடு முழுவதும் பேசப்படுகின்றன.

மாநாட்டின் வெற்றிக்கு இரவு, பகலாக தீவிரமாக உழைத்தவர்களுக்கும், எல்லா மாவட்டங்களில் இருந்து கலந்துக்கொண்ட சக்திமிக்க சகோதரிகளுக்கும், உழைத்த பாட்டாளி மக்கள் கட்சி, வன்னியர் சங்கம்,சமூக முன்னேற்ற சங்கம், மகளிர் சங்கம் உள்ளிட்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் அனும--தியும், பாதுகாப்பும் வழங்கிய துறை அதிகாரிகளுக்கும், காவல் துறையினருக்கும், கணினி குழுவின--ருக்கும் இப்பொதுக்குழு பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் 08: "நீரின்றி அமையாது உலகு" என்பதற்கிணங்க மழைக்காலங்களில் காவிரி உள்ளிட்ட அனைத்து ஆறுகளிலும் உபரி நீர் நூற்றுக்கணக்கான TMC அளவுக்கு கடலுக்கு வீணாகச் செல்கிறது. இதை தடுத்து முறையாக பயன்படுத்த காவிரி உள்ளிட்ட அனைத்து ஆறுகளிலும் 5 கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பணைகள் கட்ட வேண்டும்.**

சமீபத்தில் கர்நாடகா, கேரளா மாநிலங்களில் கன மழை பெய்ததால் கர்நாடகா அணைகள் நிரம்பி திறந்து விடப்பட்ட உபரி நீர் ஒகேனக்கல் வழியாக ஓடி மேட்டூர் அணை நிரம்பி வெளியேற்றப்பட்ட தண்--ணீர் ஒரு வாரத்தில் சுமார் 23TMC அளவு நீர் வீணாக கடலுக்குச் சென்றுள்ளது.இதே போல் தான் தமிழ் நாட்டின் அனைத்து ஆறுகளிலும் மழைக் காலங்களில் வீணாக கடலுக்குச் செல்கிறது. எனவே காவிரி, தென்பண்ணை ஆறு, பாலாறு, பவானி ஆறு, தாமிரபரணி ஆறு, வைகை ஆறு உள்ளிட்ட அனைத்து ஆறுகளிலும் 5 கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பணை கட்டி குடிநீருக்கு, பாசனத்திற்கு வளத்தை தொழில் வளர்ச்சிக்கு முழுமையாக பயன்படுத்த மாநில, மத்திய அரசுகள் சிறப்பு திட்டம் தீட்டி, கூடுதல் நிதி ஒதுக்கி நீர் ஆதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

**தீர்மானம் 09: தர்மபுரி பின்தங்கிய மழையளவு குறைந்த,வளமற்ற மாவட்டத்தின் வாழ்வாதார வளர்ச்--சிக்கு ஒகேனக்கல் பகுதியிலிருந்து நீரேற்று மூலம் தர்மபுரி - காவிரி உபரி நீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.**

தர்மபுரி மாவட்டம் மழையளவு குறைந்த, பெரும் பாசன திட்டங்கள் இல்லாத, சிறு,குறு விவசாயிகள் மானாவரிப் பயிர் செய்தும் வாழும் நிலையும், கால்நடை வளர்ப்பே வாழ்வாதாரமாக உள்ளதாலும் தர்--மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகள்,குளங்கள்,குட்டைகள் நிரப்பி கிணறுகளுக்கும்,ஆழ்துளை கிணறுகளுக்கும் நீர் ஊற்று கிடைத்திடும். இதனால் குடிநீர் பிரச்சனைகள் தீரும்,பாசனம் பெருக கால்--நடைகள்வளர்ச்சிக்கு, தொழில் மேம்பாட்டுக்கும் ஒகேனக்கல்லிருந்து நீரேற்று மூலம் பென்னாகரம் அருகில் உள்ள கெண்டையன் குட்டை ஏரியை நிரப்பி மாவட்டத்தின் அனைத்து ஏரிகளையும் நிரப்பிட தருமபுரி - காவிரி உபரி நீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 10: தமிழ்நாடு நீர் ஆதாரத்தில் கடைமடை மாநிலமாகவும், மழையற்ற காலத்தில் வறட்சி மாநிலமாகவும் மாறி குடிநீர் பஞ்சமும், பாசனமும் அற்ற மாநிலமாகவும் அடிக்கடி உருவாகிறது. இதை போக்க காவிரி - கோதாவரி இணைப்புத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.**

தமிழ்நாடு நீர் ஆதாரத்தில் கடமடை மாநிலமாக திகழ்வதால் தண்ணீருக்காக பிற மாவட்டங்களிடம் கையேந்தி நிற்கும் அவல நிலையை நீடித்து வருகிறது. ஆண்டுக்காண்டு மழை குறைந்து கடும் வறட்சி ஏற்பட்டு குடிநீர் பஞ்சமும், பாசனமும் இல்லாமல் விவசாய பயிர்கள் காய்ந்து கருகி விவசாயிகள் பெரும் நட்டத்திற்கு ஆளாகும் நிலை அடிக்கடி உருவாகிறது.இவ்வாறு தமிழ்நாடு நீருக்காக பாதிக்கப்படும் நிலை--யை போக்க நீண்ட காலமாக நிலுவையில் உள்ள காவிரி - கோதாவரி இணைப்பு திட்டத்தை நிறை--வேற்ற மாநில,மத்திய அரசுகள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 11: <u>தமிழ்நாட்டில் தமிழ் கட்டாய பாடம் ஆக்கப்பட வேண்டும். கடைகள் உள்ளிட்ட தொழில் நிறுவனங்களின் பெயர் பலகைகள்.விளம்பரப் பலகைகள் தாய்மொழி தமிழில் முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட வேண்டும். இதை நிறைவேற்ற மருத்துவர் அய்யா அவர்கள் தமிழைத் தேடி பயணம் மேற்கொண்டது நாடே அறியும்.</u>**

தமிழ் வளர்ச்சிக்கு தமிழன்னை சிலையை கையில் எடுத்து சென்னை முதல் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை வரை **மருத்துவர் அய்யா** அவர்கள் தமிழைத் தேடி பயணம் மேற்கொண்டார்கள். இதற்கு முன் தமிழன்னை சிலையோடு **மருத்துவர் அய்யா** அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட வரலாறு உண்டு.**மருத்துவர் அய்யா** அவர்கள் தமிழ் பாதுகாப்பு இயக்கமும் நீண்டகால--மாக நடத்தி வந்தார்கள்.ஆனால் தமிழ்நாட்டில் தமிழ் கட்டாய பாடம் நடைமுறைக்கு வரவில்லை.தமிழ் நாட்டின் தெருக்களில் கடைகள் முதல் தொழில் நிறுவனங்கள் வரை பெயர் பலகைகள் விளம்பரப் பல--கைகள் உள்ளிட்ட அனைத்திலும் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழில் 60% அளவிலும், ஆங்கிலத்தில் 40% சதவீத அளவிலும்,விரும்புகின்ற மொழிகளில் 20% அளவிலும் எழுதிக்கொள்ளலாம் என பல அரசாணைகள் போடப்பட்டும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே காலம் தாழ்த்--தாமல் இவற்றை தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

**தீர்மானம் 12: <u>நமது உயிரணைய தாய்மொழி தமிழ் உள்ளிட்ட இந்திய மாநிலங்களின் 22 மொழிகள் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும்.</u>**

உலகின் மூத்த மொழி தமிழ். இந்தியாவின் மாநில மொழிகள் 22. “காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு” என்பது போல ஒவ்வொரு மாநிலத்திற்கும் அவரவர் தாய்மொழியே உயிரானது, உயர்வானது. எனவே அந்தந்த மாநிலத்தின் கலாச்சாரம், பண்பாடு, மொழி வழக்கு உள்ளிட்ட உணர்வுகளை பாதித்து நடுவன் அரசு நமது தாய்மொழி தமிழையும்,இந்தியாவின் 22 மாநில மொழிகளையும் ஆட்சி மொழியாக்--கப்பட வேண்டும்.

**தீர்மானம் 13: <u>தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நீண்டகாலமாக போராடி வருவதை உணர்ந்து புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.</u>**

தமிழ்நாட்டின் அரசு ஊழியர்கள் சங்கங்களும், ஆசிரியர்கள் சங்கங்களும் தனித்தனியாகவும் கூட்--டமைப்பாகவும் சேர்ந்து நீண்ட காலமாக தங்களது உரிமைக்கு போராடி வருகிறார்கள். அவர்கள் உரி--மையை ஒடிசா போன்ற சில மாநிலத்திங்கள் நடைமுறைப்படுத்தி முன் உதாரணமாக திகழ்கிறது. அதேபோல் தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள்,ஆசிரியர்கள் நீண்ட கால கோரிக்கையான புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**தீர்மானம் 14: <u>தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், நிர்வாக வசதிக்காகவும், அரசின் திட்டங்கள் மக்களை விரைந்து சென்றடையவும் பெரிய மாவட்டங்களை பிரிக்கபட வேண்டும்.</u>**

தமிழ்நாட்டில் மக்கள் தொகையிலும் பரப்பளவிலும் பெரிய மாவட்டங்களாக இருக்கின்ற சேலம்,திரு--வள்ளூர், திருவண்ணாமலை, கடலூர், தஞ்சாவூர், ஈரோடு, கோவை, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி ஆகியவற்றை நிர்வாக வசதிக்காகவும், மாவட்ட வளர்ச்சிக்காகவும், அரசுத் திட்டங்கள் மக்க--ளை விரைவாக சென்றடையவும் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களை அவசியம் பிரிக்கப்பட வேண்டும் என பாமக பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 15: 5 தென் மாவட்டங்களின் நீர் ஆதாரத்திற்கு குடிநீர் மற்றும் வேளாண் வளர்ச்சிக்கு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடி உயரத்தை 152 அடி அடியாக உயர்த்த வேண்டும்.**

மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் நீண்ட கால கோரிக்கையாகவும்,நீர் ஆதாரத்தை மேம்படுத்தி குடிநீர் மற்றும் விவசாய பாசனத்திற்கு வழிவகை செய்ய முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடி உயரத்தை 152 அடியாக உயர்த்த வேண்டும் என பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 16: விழுப்புரம், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்கள் பயன்பெறும் கனவுத் திட்டமான நந்தன் கால்வாய் திட்டத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.**

வறட்சியான, பின் தங்கிய எவ்வித தொழில் வசதியும் இல்லாத, சிறு,குறு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பட நந்தன் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். மூத்த தலைவர் முன்னாள் அமைச்சர் அமரர் A.கோவிந்தசாமி அவர்கள் கோரிக்கை வைத்த கனவுத் திட்டம்,ஜி.கே.மணி உள்ளிட்டோர் நீண்ட காலம் சட்டமன்றத்தில் வலியுறுத்தியும் இன்று வரை நிறைவேறாதது ஏமாற்றம் அளிக்கிறது. எனவே நந்தன் கால்வாய் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

**தீர்மானம் 17: விவசாய உற்பத்தி பொருளுக்கு கட்டுபடியான விலை இல்லாமல் விவசாயிகளின் நலிந்த நிலையே நீடித்து வருவதால் விலை நிர்ணயம் வேண்டும்.**

விவசாயத் தொழில் லாபகரமாக இல்லாமல் காலம் காலமாக நலிவுற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். வறட்சி காலத்தில் பயிர்கள் காய்ந்து போவதும், மழைக்காலங்களில் சேதம் அடைவதும் தொடர்கின்றன.அதோடு கட்டுபடியான விலை இல்லாமல் சில நேரங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்த தானியங்கள், காய்கறிகள், பழ வகைகள் விற்பனையில் இழப்பு ஏற்படுவதாலும், இடுபொருட்களின் விலை அதிகம் உள்ளதாலும் விவசாயிகள் சோதனைக்கும், வேதனைக்கும் ஆளாகின்றனர். எனவே விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு முதலீடு செய்வதற்கு மேல் 50% லாபம் கிடைக்கும் வகையில் ஆண்டுதோறும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 18: தமிழ்நாட்டு மீனவர்கள் தண்ணீரில் மிதந்து,தண்ணீரோடு வாழ்ந்து குடும்ப பொருளா--தாரமே முன்னேற்றம் இல்லை. மீனவர்களின் கோரிக்கைகளை மத்திய மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டும்.**

மீனவர் பெருமக்கள் மீன்பிடித் தொழிலில் சில நாட்களில் மீன் கிடைப்பதும், சில நாட்களில் மீன் கிடைக்காமல் வெறும் கையோடு திரும்பும் நிலை உள்ளது.குடும்ப பொருளாதார முன்னேற்றமும் இல்லை. எனவே மீனவப் பெருமக்கள் மீன்பிடி தடைக்காலங்களில் கூடுதல் நிவாரணத் தொகை வழங்குவது, படகு, வலைகள் உள்ளிட்ட மீன் தொழிலுக்கான அனைத்திற்கும் அதிக அளவு மானியம் வழங்க வேண்டும் என பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 19: இந்தியாவில் தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத்தீவை இலங்கைக்கு தாரைவார்க்கப்--பட்டுள்ளது. மீண்டும் திரும்பப் பெற வேண்டும்.**

காலங்காலமாக தமிழ்நாட்டுடன் இணைந்திருக்கும் கச்சத்தீவு நமது இந்தியாவுக்கு சொந்தமானது.இது கடந்த காலங்களில் இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது.இதனால் இந்தியாவுக்கும்.தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் இழப்பாகும். எனவே கச்சத்தீவை மீட்க மத்திய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**தீர்மானம் 20: நெய்வேலி NLC நிர்வாகம் விலை நிலங்களை கையகப்படுத்துவதை கைவிட்டு, நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.**

கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி NLC சுரங்கத்திற்கு தேவையான அளவுக்கு நிலம் இருந்தும் மேலும் தேவை என நல்ல விளைச்சல் நிலங்களை அடிமாட்டு விலைக்கு வற்புறுத்தி வாங்குவதை, மிரட்டி கையகப்படுத்துவதை கைவிட வேண்டும். நிலங்களை கொடுத்து வேலை வாய்ப்பு கொடுப்படாத குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். நீண்ட காலமாக குறைந்த ஊதியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களாக பணிபுரியவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 21: புதுச்சேரிக்கு முழுமையான மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். புதுச்சேரியில் நிர்வாக வசதிக்காகவும்,வளர்ச்சி திட்டங்களுக்காகவும் புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.**

புதுச்சேரி பாரம்பரியமிக்க,பழம்பெருமையுள்ள பகுதியாக உள்ளதால் அதன் வளர்ச்சிக்கு முழுமையான மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். அதோடு நிர்வாக வசதிக்காகவும், வளர்ச்சி திட்டங்கள் விரைவாக நிறைவேற்றவும், நலத்திட்டங்கள் மக்களுக்கு உடனடியாக சென்றடையவும் காரைக்கால் மாவட்டம் உள்ளதைப்போல புதுச்சேரியை ஒட்டி புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**தீர்மானம் 22: அரசு தொடக்கக் கல்வி,பள்ளிக்கல்வி,கல்லூரி கல்வி,ஆகியவற்றில் ஆசிரியர் காலி பணியிடங்கள் அதிகமாக உள்ளதால் மாணவச் செல்வங்களின் கல்வி நலன் கருதி நியமன தேர்வில் வெற்றி பெற்றவர்களை உள்ளடக்கி உடனடியாக நிரப்ப வேண்டும்.**

அரசு துவக்கப் பள்ளிகள்,நடுநிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் நிறைய ஆசிரியர் பணியிடங்கள் நீண்ட காலமாக காலியாகவே உள்ளன. ஆரம்பக் கல்வி மிக மிக முக்கியம். ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்பட்டு வருகிறது.காலிப் பணியிடங்களை நியமன தேர்வில் வெற்றி பெற்றவர்களை உள்ளடக்கி உடனடியாக நிரப்ப வேண்டும்.அதேபோல் அரசு உயர்நிலைப் பள்ளிகள்,மேல்நிலைப் பள்ளிகள்,கலை அறிவியல் கல்லூரி--கள், பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள் (Polytechnic) ஆகியவற்றிலும் உள்ள காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். காலியாக உள்ள சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

**தீர்மானம் 23: குற்றமில்லாத, நல்லொழுக்கமுள்ள, வாழ்வியல் நெறியோடு வாழும் மனித சமுதாயத்தை உருவாக்க உயர்நிலைப்பள்ளி ,மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் நீதி போதனை வகுப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.**

மது குடிப்பழக்கம், கஞ்சா உள்ளிட்ட போதை பொருளுக்கு அடிமையாவதால் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை போன்ற குற்றச் செயல்களும், துரோகங்களும், மனிதநேயமற்ற செயல்களும், அதிகரித்து வருவது மனித சமுதாயம் சீரழிந்து வருவதாகவே கருதப்படுகிறது. எனவே குற்றமற்ற மனித நேயம் உள்ள வாழ்வியல் நெறியுடன் வாழும் முழுமையான மனிதர்களாக உருவாக்க அடிப்படையில் மாணவப் பருவத்திலேயே ஒழுக்க நெறிகளை கற்றுக்கொடுக்கும் நீதி போதனை வகுப்புகள் தொடங்கப்பட வேண்டும்.

**தீர்மானம் 24: <u>கர்நாடக மாநில அரசு காவிரியின் குறிக்க மேகேதாட் பகுதியில் அணைக்கட்டும் தொடர் முயற்சியை கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை தேவை.</u>**

தமிழ்நாட்டின் பெரிய ஆறு காவிரி ஆறு 22 மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரம்,12 மாவட்டங்களுக்கு பாசன ஆதாரமாக திகழும் காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட் பகுதியில் அணை கட்ட கர்நாடக மாநில அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் அதை தடுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், மேலும் தீவிர நட--வடிக்கை மேற்கொண்டு எந்த சூழ்நிலையிலும் மேகேதாட் பகுதியில் அணை கட்டாமல் தமிழ்நாட்டின் காவேரி உரிமையை பாதுகாத்திட வேண்டுமென இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 25: <u>தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியில் வட மாவட்டங்கள் பின்தங்கி இருப்பதை நீண்ட கால--மாக 10 மற்றும் +2 வகுப்பு தேர்ச்சி விகிதமே அடையாளமாக உள்ளதை போக்க பின்தங்கிய மாவட்டங்களின் கல்வி வளர்ச்சிக்கு அரசு சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.</u>**

தமிழ்நாட்டில் வட மாவட்டங்களின் கல்வி வளர்ச்சியை ஒவ்வொரு ஆண்டும் அரசு பொதுத்தேர்வில் 10 வகுப்பு +2 வகுப்பு ஆகியவற்றின் தேர்ச்சி விகிதம் பின்தங்கி உள்ளதை எடுத்துக்காட்டுகிறது.வடமாவட்--டங்களின் பின்தங்கிய கல்வி நிலையை போக்கிட தேவையான ஆசிரியர்களை நியமித்து, அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கி அரசு சிறப்பு திட்டங்கள் நிறைவேற்ற வேண்டும் எனபொதுக்குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 26: <u>சுங்கச்சாவடி கட்டணங்கள் அதிரடியாக உயர்த்தப்பட்டு,பொதுமக்களுக்கு பெரும் சுமை--யாக உள்ளதால் சுங்க கட்டணத்தை குறைக்க வேண்டும்.</u>**

நாடு முழுவதும் உள்ள சுங்கச்சாவடிகளில் அடிக்கடி கட்டணம் உயர்த்தப்பட்டு பொதுமக்களுக்கு கட்--டணச் சுமையாக உள்ளது. காலாவதியான சுங்கச்சாவடிகளில் தொடர்ந்து கட்டணம் வசூலிப்பதும் தேவையற்றது. எனவே பொதுமக்களின் நலன் கருதி சுங்கச்சாவடி கட்டணத்தை குறைப்பது கட்டாய தேவை.

**தீர்மானம் 27: <u>தமிழ்நாட்டில் உள்ள தொடர்வண்டி நிலையங்களில் வட மாநிலங்களை சார்ந்த இந்தி பேசுபவர்களே பணியில் உள்ளதால், பயணிகளுக்கு மொழி புரியாமல் திண்டாடும் நிலையில் தமிழ் நாட்டில் தமிழர்களுக்கேயும் பிற மாநிலங்களில் அந்தந்த மாநில மொழி பேசுபவர்களையே பணியமர்த்த வேண்டும்.</u>**

தமிழ்நாட்டின் தொடர்வண்டி நிலையங்களில் இந்தி மொழி பேசுபவர்களே பயணச்சீட்டு வழங்குவது உள்ளிட்ட பணிகளில் உள்ளதால் தமிழ்நாட்டின் பயணிகள் மொழி புரியாமல் திண்டாடுகின்றனர்.பொது மக்களின் நலன் கருதி தமிழ்நாட்டின் தொடர்வண்டி நிலையங்களில் தமிழர்களையே பணியில் நியமிக்க வேண்டும். அதேபோல் பிற மாநிலங்களிலும் அந்தந்த மொழி பேசுபவர்களையே பணியில் அமர்த்த வேண்டும்.

**தீர்மானம் 28: <u>நீட் தேர்வு அச்சத்தால் மாணவ,மாணவிகளின் தற்கொலை உயிரிழப்புகள் அதிகரித்து வருவதால் தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வு விலக்களிக்க வேண்டும்.</u>**

நீட் தேர்வில் அச்சத்தால் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் மாணவ, மாணவிகளின் தற்கொலை உயிரிழப்புகள் அதிகரித்து வருவது மிகுந்த கலையளிக்கிறது. விலை மதிக்க முடியாத மாணவச் செல்--வங்களின் உயிர்கள் பறிபோவதை தடுத்து நிறுத்தும் வகையில் அரசு நடத்தும் +2 வகுப்பு பொதுத்தேர்--வின் மதிப்பெண்களே போதுமானது என்பதாலும்,நீட் தேர்வில் தமிழ்நாட்டுக்கு விலக்களிக்க வேண்டும் என பொதுக்குழு நடுவன் அரசை வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 29: தமிழ்நாடு குடிசை வீடுகள் இல்லாத மாநிலமாக உருவாக்கப்பட வேண்டும்.கிராமங்களில் ஏழை,எளிய மக்களின் விடுபட்ட அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை கட்டித் தர வேண்டும்.**

நமது நாடு விடுதலை பெற்று 79- வது ஆண்டு கொண்டாட்டம் காணும் நிலையில், ஏழ்மை மற்றும் வறுமை சின்னமாக திகழும் குடிசை வீடுகள் அதிகம் காணப்படுவதால் வறுமை கோட்டிற்கு கீழே வாழ்--பவரின் எண்ணிக்கையை காட்டுகிறது. ஏழை,எளிய மக்கள் அனைவருக்கும் அரசு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுத்து குடிசை இல்லா தமிழ்நாடாக உருவாக்க வேண்டும். அரசு கழிப்பறை வசதிகள் கட்டிக்--கொடுத்த நிலையிலும் இன்னும் நிறைய கிராமங்களில் கழிப்பறை வசதி இல்லாமல் பெண்கள் அவதிப்--படுவதால் ஏழை,எளிய மக்களின் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பறை கட்டித் தர வேண்டுமென பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 30: இலங்கைத் தமிழர் வாழ்வுரிமை மறுக்கப்பட்டு தமிழ்நாடு உள்ளிட்ட உலகின் பல நாடு--களில் அகதிகளாக வாழ்ந்து வரும் நிலையில் 50 ஆண்டுகளாக போராட்டம் முடிந்த நிலையிலும் பிரச்--சனைக்கு நிரந்தர தீர்வு காண நடுவன் அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

இலங்கைத் தமிழர்கள் வாழ்வதற்கான உரிமை போராட்டம் நடத்தியும் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான உயிர் சேதங்கள் ஏற்பட்டு இன்று வரை பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட--வில்லை.தமிழ்நாடு உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.வாழ்--வுரிமை மறுக்கப்பட்டு நான்காந்தர குடிமக்களாகவே வந்து வருகின்றனர்.இந்நிலையை போக்க இந்திய அரசு உடனடியாக தக்க நடவடிக்கை மேற்கொண்டு இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என பொதுக்குழு நடுவன் அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 31: பாட்டாளி மக்கள் கட்சியினர் அனைவருக்கும் உடனடியாக புதிய உறுப்பினர் அட்டை வழங்கப்படும்.**

பாட்டாளி மக்கள் கட்சியில் பொறுப்பு வகிப்பவர்களுக்கும் கட்சியில் உள்ள அனைவருக்கும் உடனடி--யாக புதிய உறுப்பினர் அட்டை வழங்கப்படும்.

**தீர்மானம் 32: அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்.**

தமிழ்நாட்டின் அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, பணப்பயன் உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகளையும் காலம் தாழ்த்தாமல் நிறைவேற்ற வேண்டும்.

**தீர்மானம் 33: தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நீண்ட காலமாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த அடிப்படையில் குறைந்த ஊதியத்தில் நீண்ட காலமாக பணி புரிந்து வரும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

**தீர்மானம் 34: எல்லாவற்றிலும் சாதனை படைக்கும் இளைஞர் சக்தியை ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்வதே நாட்டின் வளர்ச்சி.உயர்கல்வி வரை படித்தும் திறன் மிக்க இளைஞர்கள், இளம் பெண்கள் வேலையில்லா திண்டாட்டத்தில் மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலையில்,வாழ்வாதாரத்திற்கும் வளர்ச்--சிக்கு வேலையில்லா திண்டாட்டத்தை போக்க வேண்டும்.**

மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையிலான வீட்டுக்கும்,நாட்டுக்கும் மிகுந்த சொத்தாக திகழும் இளைஞர் சக்தியை ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்வதே நாட்டின் வளர்ச்சி.தற்போது பள்ளி கல்வி, கல்லூரி கல்வி, தொழில் கல்வி, ஆராய்ச்சி கல்வி என படித்து முடித்த நிலையில் வேலை இல்லாமல், வாழ்வாதாரம் இல்லாமல் இளைஞர்களும், இளம் பெண்களும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி-

-யுள்ளனர்.எனவே ஒவ்வொரு ஒன்றியப் பகுதிகளிலும் வேளாண் உற்பத்தி பொருளை மூலப் பொருளாக கொண்ட தொழிற்சாலைகள் (Agro Based Industries) உள்ளிட்ட தொழிற்சாலைகள் போன்றவற்றையும், சுய தொழில் வளர்ச்சி போன்ற பல்வேறு வகைகளில் வேலை வாய்ப்பு உருவாக்கி வேலையில்லா திண்-டாட்டத்தை போக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒட்டுமொத்த இளைஞர்கள் சக்தி சார்பில் இப்பொதுக் குழு வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 35: <u>பாட்டாளி மக்கள் கட்சியின் அமைப்பு விதி - 35 உருவாக்கப்படுகிறது.</u>**

எதிர்வரும் காலங்களில் பாட்டாளி மக்கள் கட்சி பாராளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்களில் தனியாகவோ, கூட்டணி அமைத்தோ தேர்தலை எதிர்கொள்ள கட்சியி-னுடைய நிறுவனர் **மருத்துவர் அய்யா** அவர்களுக்கு மட்டுமே அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.தேர்தல் சம்பந்தப்பட்ட பேச்சுக்களோ,கூட்டணி வைப்பதற்கான பேச்சுக்களோ நடத்தும் அதிகாரம்,சட்ட விதிகளை இந்தப் பொதுக்குழு வாயிலாக திருத்தி நிறுவனர் அவர்களுக்கு அதற்குண்டான முழு அதிகாரத்தையும் வழங்குகிறது. வேறு எந்த பொறுப்பாளர்களும் நிறுவனரை தவிர மேற் சொன்ன தேர்தல்களில் பேச்சு வார்த்தையோ,கூட்டணிப் பேச்சு வார்த்தையோ செய்ய இயலாது.நிறுவனர் மட்டுமே அதனை செய்ய இயலும். புதிய விதி - 35 உருவாக்கப்படுகிறது.

மேலும், பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளர்களை பாராளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்-தல்களுக்கும், இடைத்தேர்தலுக்கும் அனைத்து அதிகாரமும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் **மருத்துவர் அய்யா** அவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான தேர்தல் கமிஷன் வாயிலாக தேர்தல் சின்னம் பெறுதல் மற்றும் தேர்தலில் நிற்பவர்களுக்கான படிவம் அனைத்தும் நிறு-வனர் அவர்களே கையொப்பமிட்டு கொடுக்க முடியும்.வேறு எந்த பொறுப்பாளருக்கும் மேலே சொன்ன அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை.இந்த வழக்கம் இதுநாள் வரை இருந்ததை சட்ட விதியாகவும் இந்த பொதுக்குழு தீர்மானம் வாயிலாக அங்கீகாரம் செய்துள்ளது.

விதி எண் 13-ல்.நிறுவனர் அழைக்கப்பட்டு என்பதற்கு முன்பாக நிறுவனர் எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் கொடுத்த பின்பு நிறுவனர் அழைக்கப்பட்டு அவர் முன்னிலையில் தான் அவரின் வழிகாட்டுதல் படி தான் பொதுக்குழு நடத்தப்பட வேண்டும் என்று இந்த விதியில் திருத்தம் செய்யப்படுகிறது.

**தீர்மானம் 36: <u>காவிரி பாசன (டெல்டா) மாவட்டத்தில் அனைத்து கால்வாய்களும் தூர்வாரப்பட வேண்-டும். நெல்லுக்கு கூடுதல் விளையும், நெல் கொள்முதல் நிலையங்கள் அதிகப்படுத்தி, மழைக்காலங்க-ளில் நெல் முட்டைகளை பாதுகாக்க நெல் கிடங்குகள் அமைக்க வேண்டும்.</u>**

காவிரி பாசன மாவட்டங்களான கடைமடை வரை எல்லா வாய்க்கால்களிலும் தூர்வாரப்படாததால் அனைத்து விவசாயிகள் நிலங்களுக்கும் பாசன நீர் கிடைப்பது தடைபடுகிறது. அதோடு தேவையான அளவிற்கு நெல் கொள்முதல் நிலையங்கள் இல்லை என்பதை உணர்ந்து, டெல்டா மாவட்டங்களில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் துவங்குவதோடு, நெல் அதிகம் விளையும் மாவட்டங்களிலும் அதிகமான கொள்முதல் நிலையங்கள் துவக்க வேண்டும். அதோடு நெல் மூட்டைகள் மழைகளில் நனைந்து வீணாவதால் மூட்டைகளை அடுக்க தேவையான அளவுக்கு கிடங்குகள் அமைக்கப்பட வேண்டும்.

**தீர்மானம் 37: <u>செஞ்சிக்கோட்டையின் பெயர் வரலாற்றுப் பிழையாக இடம் பெற்றுள்ளதால் அதை மாற்றி செஞ்சியர் கோன் காடவன் கோட்டை என்ற உண்மை தகவல் இடம் பெற மத்திய மாநில அரசுகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.</u>**

தமிழர்களின் அடையாள சின்னமான செஞ்சிக்கோட்டையை வரலாற்றுப் பிழையாக இடம் பெற செய்துள்ளதால், அவற்றை மாற்றி உண்மை தகவல் அடிப்படையில் செஞ்சியர் காடவன் கோட்டை என அறிவிக்க மத்திய,மாநில அரசுகளின் தொல்லியல் துறையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.